# தாத்தாவின் பீதி

**<u>நாடக பாத்திரங்கள்</u>**

தாத்தா - வயது 65

பாட்டி - வயது 60

ராமசேஷன் - வயது 46. முதிய தம்பதிகளின் பிள்ளை

ஜானகி - ராமசேஷனின் மனைவி. வயது 38

ராதா, சுதா - பேத்திகள்

சேகர், சந்தர் - பேரன்கள்

1

*[சுமாரான ஒரு பெரிய வீட்டின் முன்ஹால்]*

**தாத்தா:** *(நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம்)* ஆச்சு, தீபாவளிக்கு ஒரு வாரங்கூட இல்லை. ஓட்டமாய் ஓடறது நாள்.

**பேத்தி ராதை** (வயது 16) இன்னிக்காவது கடைவீதிக்குப் போகணும், இல்லையாப்பா? *(கை சவுக்கம் பின்னுவதில் ஈடுபட்டிருக்கிறது)*

**ராமசேஷன்**: என்ன ராதே? நீ அப்பா பொண்ணு . . .சமத்தாய் இருப்பேன்னா நினைக்கிறேன்!

**பேத்தி சுதா** (வயது 13) இந்த தாஜாவுக்கெல்லாம் அக்காவும் நானும் ஏமாந்துடமாட்டோம் அப்பா! கபர்தார்!

**தாத்தா:** அப்பாவை மிரட்டத்தான் ஹிந்தி உதவணுமா?

**சுதா**: பின்னே என்ன தாத்தா அப்பா கண்டபடி பேசினால்?

**ஜானகி**: *(வருகிறாள்)* அப்பா ஒண்ணும் கண்டபடி பேசல்லே! அப்பா சும்மா சொல்றா! ராதைக்கு வராத ரோசம் உனக்கென்னத்துக்கு?

**சுதா:** இந்தமாதிரி விஷயத்துலே வேடிக்கை என்னவாம்?

**ராமசேஷன்:** தீபாவளி சமயத்திலே வேடிக்கை பண்ணாமல் பின்னே எப்பொ வேடிக்கை பண்றதாம் சொல்லு!

**ராதை**: நீ சொன்னது வேடிக்கையாய்ப் படலை அப்பா! எனக்குக்கூட பயமாய்த்தானிருந்தது . .

**ஜானகி:** நன்னா பயந்தே! தீபாவளி மாசமுதல்லே வந்திருக்கு! இந்தத் தடவைஇன்னும் கொஞ்சம் தாராளமாகவே வாங்கறதாக உத்தேசம், தெரியுமோன்னோ? பாட்டிக்குகூட இந்த விசை பட்டுப்புடவைதான் வாங்கப் போறோம்.

**ராமசேஷன்:** அதானே!

*(ரேழி நடையில் படுத்திருக்கும் பாட்டி ஒருக்களித்து படுக்கிறாள். தாத்தா கனைக்கிறார்)*

**ராதை:** ஆமாப்பா . . . பாட்டிக்கும் பட்டுப்புடவையே வாங்கணும்.

**தாத்தா**: என்னப்பா ராமு . . .

**ராமசேஷன்**: (*அப்பா பேச்சை கவனியாதவர்போல்*) ஆமாம் ஜானகி. நீயும் அம்மாவும் பட்டுப்புடவை நல்லதாய் எடுங்கோ . . .

**சுதா:** எங்களுக்கு நூல் சித்தாடையா?

**ராதை**: என்னப்பா இப்படி . . .?

**தாத்தா:** ஏண்டி குழந்தைகளா? அப்பா சொன்னா நான் மட்டும் ஒப்புக்கொண்டுவிடுவேனா? . . . முழுக்கக் கேளுங்களேன் . . .

**ராமசேஷன்**: ஆமாம் அப்பா . . . அவசரக்குடுக்கைகள் . . .துளிகூட இதுகளுக்கு . . .

**சுதா:** மூளையில்லையாக்கும்! நாங்கள் துணிகள் ஸெலக்ட் பண்றபோது மூளையைப் பாருங்கோ!

**பேரன் சேகர்** (*வயது 14, வருகிறான்*) மூளையைக் கழட்டியே வைச்சூட்டயா? எங்கே, எங்கே?

**சுதா**: போண்ணா . . . நீதான் மூளையில்லாமல் பேசறே! அப்பா நம்பளுக்கெல்லாம் தீபாவளிக்குச் சுழிச்சுடப் போறாளாம்! . . . நீ என்னடான்னா . . . .

**சேகர்:** ஓ! ஐ ஸா பாத்? (வாசற்புறம் திரும்பி) டேய், சுண்டு, மண்டு, குண்டு! ஜல்தி வாடா!

**சுந்தர்** *(குரல்)*: வரமுடியாது போ!

**சேகர்:** அப்படியா? இரு, இரு! உனக்கு தீபாவளிக்கோ குச் நை! படா அண்டா! *(சுழித்துக் காட்டுகிறான்)*

**சுந்தர்** (*வயது 11, ஓடிவருகிறான்*) என்ன ஆச்சு?

**ஜானகி:** ஒண்ணும் ஆயிடல்லே! உங்கள் அமர்க்களம்தான் பெரிசா இருக்கு! ஏண்டி சுதா, உன்னோட கலகந்தானே இது? என்னத்தை இல்லைன்னூட்டோமாம் சொல்லு! . . .கொழுப்பைப் பாரு!

**தாத்தா:** நண்டுகளின் கொண்டித்தனத்தைப் பாரு! அதுகளுக்கு இல்லாத தீபாவளி யாருக்கு?

**ராதை:** என்னையும் நண்டுலே சேர்க்கவேண்டாம்!

**ராமசேஷன்**: எல்லோருக்கும் இந்த விசை எல்லாம் வாங்கலாம்னு பேசிண்டே யிருக்கோம்!. .

**ஜானகி**: பட்டுப்புடவை வேண்டாம்னு பாட்டி தட்டிக் கழிச்சுக்கொண்டே வரார் . . . இந்த விசை எடுக்கணுங்கிறேன் . . .

**ராமசேஷன்**: பத்து வருஷமாச்சு அம்மா தீபாவளிக்குப் பட்டுகட்டி!

**தாத்தா**: சொல்றதைக் கேளு ராமு . . .

**ராமசேஷன்**: இந்த வருஷம் அம்மா பட்டுப்புடவை கட்டாட்டா ஜானகிகூட கட்டமாட்டாளாம். (மனைவியைப் பார்க்கிறார்)

**ஜானகி**: ஆமாம்னா, எனக்கு மட்டும் கூச்சமா இருக்காதா?

*சேகர்*: இந்தப் பேச்சு முடிஞ்சு கடைக்குப் போக இன்னிக்கு முடியுமா? . . . பாட்டி பட்டுப் புடவை வேண்டாம்னாநல்லதாச்சு! எனக்கு சைக்கிள் கிடைக்கும்!

**சுந்தர்**: நேக்கும் சைக்கிள்!

**சுதா**: எனக்கு மட்டும் லேடீஸ் சைக்கிள் கேக்கமாட்டேனோ?

**ராதை**: பாட்டிக்குப் பட்டுப் புடவை வாங்காட்டால்தானே?

**தாத்தா**: ராமு, அதுகள் சொல்றமாதிரி ஏதாவது செய்யலாம் . . .

**ராமசேஷன்**: அதுகள் சொல்லாதென்ன? அப்படிப் பார்க்கப் போனா வருஷா வருஷம் ஜவுளி தீபாவளிக்கு எடுப்பானேன்?

**ஜானகி**: ஜவுளி எடுக்கணும், புதுசு கட்டணும்னுதானே வாங்கறது!

**தாத்தா**: புதுசு வேண்டாங்கலையே! அம்மாவுக்கு அனாவசியமா பட்டுப் புடவை வேண்டாங்கறது . . . அவ்வளவுதான்!

**ஜானகி**: இந்த விசை அம்மாவுக்கும் பட்டுப் புடவைத்தான்!

**தாத்தா**: ஏய், கேட்டாயா சங்கதி?

**சேகர்**: கடைக்கு நாளைக்குதானே?

**ராமசேஷன்**: நிஜமாகவே நாளைக்குத்தான் கடைக்கு பயணம்! இன்னிக்குன்னு யார் சொன்னது?

**சேகர்**: ரொம்ப சரி! (போகிறான்)

*(சுதா, சுந்தர் அண்ணனைத் தொடர்ந்து செல்கின்றனர்)*

**பாட்டி**: (எழுந்து உட்கார்ந்து) கேட்டேன் . . . என்னத்தைச் சொல்றதுன்னு தெரியாமெ படுத்துக்கிடைந்தேன்.

**தாத்தா**: வாங்கினா வாங்கட்டும்னு இருந்தியோன்னு கேட்டேன்.

**பாட்டி:** நன்னா நினச்சது! பட்டுப் புடவை என்னாலே தூக்கிக் கட்டமுடியுமா? நூல்புடவை சௌக்கியம் வருமா என்ன? நூல்புடவை போதும்டாப்பா, ராமு!

**தாத்தா:** நீ நூல்புடவை போதும்னா பட்டுப் புடவை வாங்கி விடறோம்னு சொல்றா! புடவையே வேண்டாம்னு சொல்லு! அப்பத்தான் நூல்புடவையாவது கட்டிக்கோன்னு வழிக்கு வருவா! இது தெரியலையே உனக்கு! *(பாட்டி விழிக்கிறாள்)*

**ராமசேஷன்:** நீங்க வேறே அம்மாக்கு உபதேசம் பண்ணுங்கோ!

*ராதை:* இந்தத் தாத்தா எப்பவும் இப்படித்தான்!

தாத்தா: பாட்டிப் புடவைக்கி அன்னாவசியமா பணம் போடுவானேன் என்கிறேன் . . .

**பாட்டி**: அதுக்கென்ன கெட்டிக்கரை புடவையெல்லாம் நன்னாத்தான் இருக்கு - என் நறுங்கை உடம்புலே கட்டிக்க முடியவேண்டாமோ? கச கசன்னு . . .

**தாத்தா:** வாங்கிண்டு வந்துட்டு திருப்பியனுப்பும்படி வைச்சுக்காதே.

**ராமசேஷன்:** (*கவனியாதவர்போல்*) உம். டிபன் சாப்பிட வரேன்!

## 2

*[மறுநாள். இரவு மணி சுமார் எட்டு. முன் ஹாலில் பாட்டியும் தாத்தாவும் சம்பாஷிக்கிறார்கள்]*

**தாத்தா:** இன்னும் வரக்காணோமே அவாள்ளாம்?

**பாட்டி:** ஆமாம். இன்னும் காணோமே!

**தாத்தா:** கடைகளிலே ஆயிரமாயிரம் கொட்டிக்கிடக்கு!

**பாட்டி**: எதைப் பார்த்தாலும் நன்னாருக்கு! பொறுக்கி எடுக்க என்ன இருக்குன்னு நமக்குத் தோணறது!

**தாத்தா:** வருஷா வருஷம் ஒரு பட்டுப் புடவை எடுக்க மூணுமணி தேசாலம் ஆகும்! இந்த விசை இரண்டு பட்டுப் புடவை எடுக்க ஆறுமணி தேசாலம் வேணுமா? *(முறுவலிக்கிறார்)*

**பாட்டி:** அப்படின்னா . . . இரண்டு பட்டுப் புடவை வாங்கிண்டு வந்துடுவாங்கிறேளா?

**தாத்தா:** ராமுவும் ஜானகியும் பேசினதைப் பார்த்தால் அப்படித்தான் தோண்றது.

**பாட்டி:** வருஷா வருஷம் சொல்றதைத்தானே நாமும் சொன்னோம்? பாவம், அதுகளுக்குக் குறைதான்.

**தாத்தா:** தீபாவளிக்குன்னு வாங்காட்டாலும் இந்த ஏழெட்டு வருஷத்துலே நாலோ அஞ்சோபட்டுப் புடவையை தட்டிண்டு போயிட்டே, இல்லே?

**பாட்டி:** *(சந்தோஷமுடன்)* ஆமாம்! அத்தை முறையிலே ரெண்டு புடவை! அப்புறம் ராமுவே மாப்பிள்ளை வந்ததுக்கும் வாங்கினான். நாட்டுப்பெண் வந்ததுக்கும் வாங்கினான் . . .

**தாத்தா:** ஷஷ்டியப்த பூர்த்திக்கு மூணா, நாளா?

**பாட்டி:** அதுக்கு ரெண்டு!

**தாத்தா:** சத்தமில்லாமல் கூட்டா குடும்பமா இருக்கிறோமே! அதே பாக்கியம்! அதுகள் சிறிசுகள். இந்த நாள் பாஷனாய் இருக்கட்டும். நமக்கு அதைப் பார்த்தாலே சந்தோஷமில்லையா?

**பாட்டி:** ஆனா இந்த விசை எனக்குப் பட்டுப் புடவை வாங்கிவிடுவா போலிருக்கு . . .அப்போ உங்களுக்கும் ஜரிகைக்கரை வேஷ்டியும் வாங்கிப்பிடுவா! . . .

**தாத்தா:** அப்படித்தான் தோண்றது; நான் வேணுமானா ஒரு இருநூறு எடுத்துத்தரேண்டான்னுகூடச் சொன்னேன் . . . அதுக்கும் ராமு சம்மதிக்கல்லை!

**பாட்டி:** இந்த விசை வேணா இருந்துட்டுப் போகட்டும்னு விட்டுடுவோமா?

**தாத்தா:** சரி! அதுகள் பேச்சை நாம் இந்த விசை கேட்டுடறது!

*(வாசலில் சலசலப்பு. பேரன் பேத்திகள் கையிலே பொட்டணங்களுடன் ஓடி வருகின்றன)*

**கூச்சல்:** தாத்தா! பாட்டி! சித்தாடை! வேஷ்டி! புஷ்கோட்டுக்குத் துணி! . . . பைஜாமாக்கு வேறே! . . .*(அவரவர் கையிலுள்ள பொட்டணங்கள் பிரிக்கப் படுகின்றன)*

**கூச்சல்:** இதோ இதுபார் பாட்டி! இங்கேபார் தாத்தா!) *(ஜானகியும், ராமசேஷனும் வருகின்றனர்)*

**ராமசேஷன்:** பார்த்தேளா அப்பா ஜவுளி! அம்மா, பார் உன் பேரன் பேத்தி அட்டகாசமா பொறுக்கி எடுத்ததை . . .

**பாட்டி:** கூச்சமில்லை . . . ஒண்ணுமே புடிபடாதுபோலிருக்கு . . .

**ஜானகி:** சுதா, சேகர் . . .சித்தெ நிதானமா எல்லாம் வையுங்களேண்டி! குதிக்கிறேளே கிடந்து!
சுதா: ஆனந்தகூத்து ஆடினால் தப்பா?

**ராதை:** அம்பலக்கூத்து ஆடப்போறியோன்னு பயப்படறா!

**தாத்தா:** இது ரெண்டும் சித்தாடையாக்கும்! லேசாயிருக்கு!

**ராதை:** இது என்னோடது பாட்டி!

**சுதா**: இது என்னோடது பாட்டி!

**தாத்தா**: நான் சரியாப் பார்க்கவேண்டாமா?

**சேகர்:** நீங்க இதெல்லாம் பார்க்கணும் . . . புடவையிலே என்னத்தான் அழகு இருக்கோ? . .

**சந்தர்:** நம்ப போலாண்டா எடுத்துண்டு . . . (எழுகிறான்)

**தாத்தா:** எல்லாந்தான் திவ்வியமா இருக்குங்கிறேனே!

**பாட்டி**: *(சுதாவிடம்)* உனக்குப் பாவாடை மேலாக்கு பாந்தமாய் இருக்குமே!

**ராதை**: என்னைச் சொல்லலையே பாட்டி? நல்ல வேளை!

**சுதா:** என்னைத்தான் எல்லோரும் சொல்லுவா!

**தாத்தா**: *(மனைவியிடம்)* வாங்கிண்டுவந்தப்புறம் நொடிக்காதே!

**ராமசேஷன்:**எங்கேப்பா அம்மா நொடிச்சா? பாவாடை மேலாக்கு பாந்தமாயும் இருந்திருக்கும்! பணமும் குறைஞ்சிருக்கும்! இதுக்கெல்லாமே ஏகப்பட்டது ஆயிடுத்து . . .

**சுதா**: எனக்கு புடவைதான் நன்னாயிருக்கும்! அக்கா உசரம் நானும் இருக்கேன்! *(புடவையுடன் போகிறாள்)*

**தாத்தா:** அம்மாவுக்கும் பட்டுப் புடவையே எடுத்துட்டயாக்கும்?

**ராமசேஷன்**: இல்லையே! அது வாங்காமெதான் . . .

*(பொட்டலத்தை பிரித்துக்கொண்டு மௌனமாயிருந்த ஜானகி, பிரித்த இரண்டு பொட்டலங்களை கணவரிடம் தருகிறாள். அவர் அவற்றை பெற்றோர் முன் வைத்து உருப்படிகளியை தனித் தனியே காட்டுகிறார். ஜானகி போகிறாள்)*

**ராமசேஷன்**: இதோ பாரும்மா. கடைசியிலே நீ பிடிச்சப்பிடிதான் பலிச்சுது! ஜானகி பட்டுதான் வாங்கணும்னா! ஆனால் குழந்தைகள் பண்ணின

**ராமசேஷன்:** பட்டோ, சில்கோ, நூலோ எது வேணாலும் அவள் வாங்கிக்கட்டும் . . . மாப்பிள்ளை வேஷ்டிக்கும் 20 ரூபாய் சேர்த்து நூறாய் அனுப்பிச்சுடறது . . . இந்தோப்பா . . . நம்ம வேஷ்டிகள் . . .

**தாத்தா:** பேஷான செலக்ஷன் போ.

**பாட்டி:** என் புடவை ஜானகி புடவைக்கு மேலே இருக்கு . . .

**ராமசேஷன்**: சரி, எடுத்துவச்சுட்டுமா உள்ளே? பசங்கள் தங்கள் உறுப்படியை எடுத்துண்ட்டு போயாச்சா - கவனிக்கவே இல்லை! *(போகிறார்)*

## 3

*[இரண்டு நாள் கழித்து, ஒரு மாலை மணி சுமார் ஆறரை. தாத்தா வாசற்படி ஏறுகிறார்)]*

**பேத்தி ராதை:** *(ஓடோடி வருகிறாள்)* தாத்தா! தாத்தா! பாட்டி தொமுக்கட்டீர்னு கிணற்றடியிலேவிழுந்துட்டா!

**தாத்தா:** *(பரபரப்புடன்)* சித்தே நிதானமாய்ச் சொல்லும்மா! காயம் ஏதாவது இருக்கா?

**ராதை**: இடுப்பை ஒரே அடியாயிழுத்துப் பிடிச்சூடுத்து! டாக்டரைக் கூட்டிண்டு வா தாத்தா!

**தாத்தா:** டாக்டர் எதுக்கு? நேராயிடும்! நான் போய்ப் பார்க்கிறேன்.

**ராதை:** *(கைகளை விரித்து வழி மறைத்து நிற்கிறாள்.)* டாக்டரை அழைச்சிண்டுதான் உள்ளே வரணும்! பாட்டிமேலே அக்கறை இல்லாமெ பார்க்கப் போவானேன்?

**தாத்தா:** சும்மாவானும் என்னை கிண்டல் பண்ண நீ இந்தமாதிரியெல்லாம் பேசினால் ஏமாந்துடுவேனா? பாட்டி விழுந்திருந்தால்தானே டாக்டர் வரணும்?

**ராமசேஷன்** *குரல்:* அப்பா வந்துட்டா போலிருக்கே! *(எழுந்து வருகிறார்)* அப்பா! அரைமணி முந்தி அம்மா விழுந்து, இடுப்பை இழுத்துப் பிடிச்சுண்டிருக்கு. (பெண்ணின் கைகளை விலக்குகிறார்) பாவம், ஒரே அசதியா படுத்திண்டிருக்கா அம்மா.

**ராதை:** பொய்யான்னு பாரு தாத்தா! (தாத்தா *உள்பட மூவரும் உள்ளே செல்கின்றனர்)*

**தாத்தா:** நிஜந்தானா அப்படீன்னா?

**ராதை:** இல்லே, பாட்டியும் பொய்க்கோசரம் படுத்துண்டிருக்கா தாத்தா!

**ராமசேஷன்:** டாக்டர் வந்து பார்த்துட்டுப் போனார், அப்பா. பத்து பதினைந்து நாள் அம்மா நடமாடாமல் ஜாக்கிரதையாயிருக்கணும்னு சொல்லிட்டுப் போனார்.

**ராதை**: நீங்களானா உடனே டாக்டரை அழைச்சிண்டு வருவேளா தாத்தா? எதுக்கு டாக்டர்னு அலட்சியமாய்ச் சொல்லுவேள்! நான் வாசல்லே உங்களை அதுக்குத்தான் பரிக்ஷை பண்ணினேன்! *(தாத்தா மௌனமாய் நாற்காலியில் அமறுகிறார்)*

**ராமசேஷன்:** வயசு காலத்திலே ஜாக்கிரதையாய் இருக்கணும்! உடம்புக்கு வராமலேயே இருக்கும்! வந்துதோ, எது சாக்குன்னு பிடிச்சூண்டூடும்!

**ஜானகி:** பட்சணங்கள் பண்ணமுடியாமெ விழுந்துட்டோமேன்னு அம்மா விசாரம்! இப்படி அலட்டிண்டால் முடியுமோ?

**தாத்தா:** உம் . . . நடக்கட்டும் . . . *(எழுந்து போகிறார்)*

*[மறு நாள் இரவு. சுமார் ஏழு மணி. முன் ஹாலில் பாட்டி கட்டிலில் படுத்திருக்கிறாள். சோர்வு மேலிட்டால் தூங்கிவிட்டாள். ராமசேஷன், ஜானகி, குழந்தைகள், கூடியிருக்கின்றனர். கட்டிலுக்கு சிறிது அப்பால் சேகர், சந்தர், சுதா வாணங்கள், பட்டாசுகள் பங்கு போடுகின்றனர். ராதை புத்தகம் படிக்கிறாள்.]*

**ஜானகி:** இன்னும் அப்பாவைக் காணோம்! எங்கே போயிருப்பார் இத்தனை நாழியா?

**ராமசேஷன்:** தெரியல்லியே!

**ராதை**: நேத்து முதலே தாத்தா ஒருமாதிரியிருக்கா அப்பா!

**ராமசேஷன்**: தாத்தாவுக்குப் பாட்டியின் கஷ்டத்தைப் பார்க்க சகிக்கல்லே, பாவம்!

**ராதை**: ஆமாம்பா, அப்படித்தான் இருக்கும்!

**ஜானகி:** நானும் கனிச்சேன்.

**ராமசேஷன்**: வயதுகாலத்திலேதான் அபிமானம் ஜாஸ்தியாயிருக்கும், தெரியுமா ராதை?

**ராதை**: பாட்டி மடேர்னு விழுந்ததை தாத்தா பார்த்திருந்தால் அழுதிருப்பாளோ?

**சேகர்:** நான் இந்த வாணம் இப்பவே விடப்போகிறேன்! (வாசலுக்கு ஓடுகிறான்)

**ராதை**: போ, போ! இப்பவே தீர்த்தூடு! தீபாவளியன்னிக்கு பாட்டிக்கு சித்தே தேவலையானா வந்து பார்ப்பாள்! நீங்கள்ளாம் அதுவரைக்கும் வச்சிருப்பேளா?

**சுதா**: நான் வச்சிருப்பேன்!

**சந்தர்**: நானும் இப்போ விடமாட்டேன்!

*(சேகர் ஓடிவருகிறான் - கையில் ஒரு பொட்டலமுடன்)*

**சேகர்**: தாத்தா இன்னும் என்ன என்ன வாங்கிண்டு வந்திருக்கா! நான் பிடுங்கிண்டு வந்துட்டேன்!

**ஜானகி**: உங்களுக்குத்தான் வாங்கிண்டு வரார்னு தெரியறதே . . . கையைப் பிடுங்கி எடுத்துண்டு வராட்டா என்ன?

**சுதா, சந்தர்**: எங்கே, சட்டுன்னு பிரி! பிரிடா!

**சேகர்:** *(பிரித்தப் பொட்டலத்தை அப்படியே மேஜைமேல் போட்டுவிட்டு)* பூ! புடவை! யாருக்கு வேணும்?

**ராதை:** பட்டுப் புடவை!

**ஜானகி:** சிம்மக்கலர்! . . . ஒன்பது கஜம்!

**சுதா:** எங்களுக்கு நாலரை நாலரை கஜமாக்கிழுச்சுத்தருவா!

**ஜானகி**: உளராதேடி!

**ராமசேஷன்:** அப்பாவைக் காணோம்! தோ . . . வந்துட்டா! *(தாத்தா வருகிறார்)*

**ஜானகி:** அம்மாக்கோ என்னமோ . . . *(முறுவலிக்கிறாள்)*

**தாத்தா**: ஆமாம் . . . அவளுக்குத்தான்! *(கட்டில்மேல் கவனம் செலுத்துகிறது பார்வை)*

**ராதை:** பாட்டிக்குப் பட்டுப் புடவை வேண்டவே வேண்டாம்னு சொன்னேளே தாத்தா!

**தாத்தா:** அப்போ சொன்னேன். இப்போ உங்க பாட்டி செத்துகித்துப்போயிடுவாளோன்னு பயமாயிருந்தது . . . வாங்கலாமேன்னு வாங்கினேன். *(அசட்டுச் சிரிப்பு சிரிக்கிறார்)*

ராமசேஷன்: உங்க்ளுக்கு ஜரிகை வேஷ்டி ஒன்று இல்லாட்டா அம்மாவுக்கு இதை கட்டிண்டாப்பலே இருக்குமா? நாளைக்கு உங்களுக்கு நான் வாங்கிண்டு வந்துடறேன்.

**தாத்தா:** சரிதாண்டா . . . ஏன் வாங்கினோம்னு பார்க்கிறேன் . . . இதை திருப்பிவிடலாம்னு தோண்றது!

**ராதை:** தோணும்! தோணும்! கொண்டாங்கோ அப்பா பாட்டி புடவையை! உள்ளே வைக்கிறேன்! *(ஜானகியும் பெண்ணைத் தொடர்ந்து போகிறாள்)*

**********